அசல்

தி. புன்னைவனம் பிள்ளை

அசல் - 1 நகல் - இல்லை.

No. 38
14.12.70
Pages 145-149
தமிழ்த் துறையும்

ஓம். தத். ஸத்.

உத்தமதானபுரத்தில் உயர்குலத்து உதித்த உத்தமரே! மறையோர் குலத்து மாசற்ற மணியே! சென்னையில் செழிப்புற்றிருக்கும் செல்வரே! தரணியில் தமிழைத் தளராது காக்கும் தனிப்பெரும் கவியே! இறைவன் அருளால் இவ்வுலகில் தோன்றியவா! தங்களது திவ்விய சரித்திரத்தை ஆனந்த விகடனில் கண்ணுற்று ஆனந்தம் பெருகிவர, ஆனந்த வருஷத்தில் அவதாரமென அறிந்ததும் அடியேன் சில மொழிகளைக் கூற அவாவுற்றேன். இருக்க.

லக்னம். மிதுனம். கல்விஸ்தானாதிபதியையும் களத்திரஸ்தானாதிபதியையும் வந்த குருபகவான் பஞ்சமத்தில் இருந்து பார்வை. கடவுள் அருள்.

லக்னாதிபதியாகவும் கர்மாதிபதியாகவும் வந்த புதன், இடம் புபாக்கியாதிபனாகிய சுக்கிரனோடும், விரயஸ்தானாதிபனை சூரியனோடும், ஸஹோதரஸ்தானாதிபனான ரவியோடும் சத்ருஸ்தானத்தில். லாபம். விரயம். பிரதாபம். கும்பமீனே அதிகம். களத்திரசுகம் குறைவு. ஸஹோதரபாக்கியம் குறைவு.

சந்திரன் லாபாதிபதியாக வந்து களத்திரஸ்தானகமனம்.

பஞ்சமாதிபனும் சத்ருஸ்தானாதிபனுமாக வந்த சனி பாக்கியஸ்தானகமனம்.

இந்நிலையால் தங்களிடத்தில் அமைந்திருக்கும் குணங்கள்:—

சொந்தக் காரியங்களைக் காட்டிலும் பிறருடைய காரியங்களைக் கவனித்துப் பார்க்கும் இயல்பு. பிற வருத்தத்தைப் போக்குவதற்காகவும் பொது ஜனநன்மைக்காகவும் செய்யும் சகல

அசல்

தி. புன்னைவனம் பிள்ளை

அசல் - 1 நகல் - இல்லை.

காரியங்களிலும் தீவிர ஊக்கமும் சுறுசுறுப்பும் காணும். உத்தியோகங்கள் நிலையற்று இடமாற்றமாக மாறி வரும். இருக்கும் நிலையில் பெயரும் புகழும் காணும். பணம் சம்பாதித்தாலும் செலவு வருமானத்தை விட-மிகுந்திருக்கும். இரண்டு ஜனங்கள் கூடும் இடத்தில் செல்வதற்கும் அங்கு நியாயங்களை எடுத்துக்கூறுவதில் சற்றேனும் கூச்சல் இராது. தனது கல்வி, வல்லமை, ஆற்றல். இவைகள் காரணமாக உன்னத பதவி கிடைத்தாலும் அந்தப் பதவியில் நீண்ட காலம் இருக்கும் அபாயம் இராது. கஷ்டத்தைப் பொறுப்பதும் தியாகம் செய்வதும் இயற்கையாகிய குணங்களாகும். நாம், நம் இனத்தாருக்கு செய்ய வேண்டிய கடமையைச் செய்து முடித்தோம் என்னும் உணர்ச்சி மேலிட, தன் காரியம் நஷ்டமானாலும் கெட்டாலும் பொருட்படுத்துவதில்லை. காதல், கடமை, ஸ்திரீ வாழ்க்கை இவைகளைப் பற்றி தீர்மானமான அபிப்பிராயங்களுண்டு. இரக்கம் மிகுந்தவர். விரோதிகள் பலர் இருக்கலாம். அவர்கள் நம் நெருக்கும் இல்லை. நண்பர்களிடம் மிகுந்த பற்று. செய்கையிலும் பேச்சிலும் மதிப்புற்று இருக்கும். மானஸிக விஷயங்களில் தான் குணங்களை இழப்பதுண்டு. உணர்ச்சி மிகும். இதனைச் சுலபமாக மனம் நோக்கு விடும். பிறர் குணத்தையும் மனப்பான்மையையும் சீக்கிரத்தில் அறியும் ஆற்றல் உண்டு. இங்ஙனம் அறியும் தன்மையினாற் பதால் - கோபம் சற்று இருக்கலாம். இந்த நிலை தன்னை மோசம் செய்ய வந்தவர்களிடம்

அசல்

தி. புன்னைவனம் பிள்ளை

தான். கண்பார்வையினால் பிறரை அடக்க அடக்கும் திறமை உண்டு. மிதமிஞ்சி வேலை செய்வதாலும், வக்கிரகதி ஆவதில் இருந்ததாலும் அஷ்டமாதிபதியான குருவும் ஸப்தமாரகஸ்தானாதிபதியான வியாழன் பார்ப்பதாலும் உடம்பு இளைத்திருக்கலாம். இங்ஙனம் இளைத்த உடம்பை மேலும் மேலும் பொது நலத்தைக் கருதி இளைக்க வைப்பதுவே தங்கள் நிலை. மார்பு துடித்தல். நரம்புகளுக்கு வேலைக் குறைவு, இரத்தவோட்டம் குறைவு. பாரிசவாயுவில்லாவிடினும் அதன் அறிகுறி முதலிய பிணைகளும் இருக்கலாம். சில வேளைகளில் தலைவலி வாதம் முதலியவையும் ஏற்படலாம். சுபம்..

N.B வக்கிர மதி தனுர்ராசியோடு சேர்ந்ததாலும் தனகாரகனை வியாழன் வக்கிரத்தைப் பார்த்தாலும் "செழிப்புற்றிருக்கும் செல்வர்" என்று அழைக்கலாமென்னன். மேலும் சனியும் சுக்கிரனும் பரிவர்த்தனை யோகம் பெற்று இருப்பதால் குறிப்பிடத்தக்க பலம் உண்டு.

வக்கிரகதியான புதனை அம்சலக்கினாதிபதியாக பார்த்ததாலும், பஞ்சமாதிபதியாக்கியத்தைப் பற்றியதாலும் - பாக்கியத்தில் அம்சத்து வியாழன் பஞ்சஸ்தானத்தில் நின்று பார்ப்பதாலும் "இறைவன் அருளால் தோன்றியவர்" என்று அழைக்கலாமென்னன்.

பதினொராம் பாவாதிபனான சந்திரன் திரிகோண ஸ்தானத்தில் நின்று லக்கினத்தைப் பார்ப்பதாலும், நாலாம் பாவாதிபனை

# அசல்

தி. புன்னைவனம் பிள்ளை

அசல் - 1 நகல் - இல்லை.

ணவியாழன் விட்டில் வளர் பிறைநிலவு தன் இருக்கை
யில் மிகு வியத்தகுனும், அம் சகாயமும், பரு
சமஸ்தானத்தை அடைந்து குரு பார்வை
யுடன் வித்தை ஸ்தானத்து அதிபதியாக அமர்
ந்ததாலும் "தமிழைத் தனாது காக்கும்
தனிப் பெரும் கடமை" என்று கூறலாயினேன்.
ஆகையால் உண்மை நிலையை வைத்
தே என் அறிவுக்கு எட்டியதைக் கூறி
னேனே அன்றி வெறும் கூற்றன்று.
1940. மே மாதம் 7 தேதிக்கு மேல்
அஷ்டமாதிபதியான குருவின் திருக்கும் கீழ்
பார்வை எழுத்தான "ம" என்பதில் இருப்ப
தால் அந்த வெட்டிய பழனிமலை முரு
கனுக்கு பஞ்சாமிர்த அபிஷேகம் செய்
து வருவது வாழ்க்கை மேன்மைப்ப
டுத்தும் என்று ஐம்புலன்களடங்கிய
அகக்கூற்றால் அறிவித்துக் கொள்
கிறேன். தேவரீர் சிவநாமம் உச்சரி
த்து சிவனிலேயே மனம் பற்றினபோ
தும் அ..ஷின் பெருவாழ்வாகிய இந்தத்
தேவஸ்தானத்துக்கும் பற்றுதல் இருக்குமே
என்ற உறுதியுடன் எனது தாழ்மையா
ன எண்ணத்தை இத்துடன் முடித்துக்
கொள்கிறேன்.
பிழை இருப்பின் பொறுத்தருள்
தரவும்.

என்ற
தங்கள் கீழ்ப்படிதலுள்ள
சோதிடர்.
தி. புன்னைவனம் பிள்ளை
அமிர்தபுரம்
நாகர்கோவில் போஸ்ட்

P. 145-149
10.8.

J. Poonnaivanam Pillai

# அசல்

தி. புன்னைவனம் பிள்ளை.

அசல் – 1 நகல் – இல்லை.




M.R.Ry 4. 3. 40

Dr. U. V. Swaminatha Iyer Avl.

No. 38 14.12.70.

Pages 145 – 149. தமிழ்க் கருவூலம்

"Thiagaraja Vilas"

Triplicane,

Thiruvadiveeswaram Petta,

Madras

அசல்

தி. புன்னைவனம் பிள்ளை

அசல் - 1 நகல் - இல்லை.

